செய்தி வெளியீடு எண்: 158 நாள் : 11.03.2016

# செய்தி வெளியீடு

## தேர்தல் விதிமீறல் – உரிய ஆவணங்கள் இல்லாத ரூ.49 லட்சம் தொகை, ஒயின் பிராந்தி மதுவகைகள் பறிமுதல்–09.03.2016அன்று பறக்கும் படை கைப்பற்றி வழக்குப் பதிவு – இதுவரை 87 லட்ச ரூபாய் பறிமுதல்

••••••••

தமிழ்நாட்டில் 16.05.2016 அன்று நடைபெறவுள்ள சட்டப்பேரவை பொதுத்தேர்தலையொட்டி தேர்தல் நடைமுறை அமலில் உள்ளது. தேர்தல் விதிமுறை மீறி ஆவணங்கள் இல்லாமல் பணமோ அல்லது வாக்காளர்களுக்கு கொடுக்கும் வகையில் வேறு பொருட்களோ எடுத்துச் சென்றால் அவை பறிமுதல் செய்யப்படும் என மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப. அவர்கள் ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

தேர்தல் விதிமுறைகள் கண்டிப்பாக கடைபிடிக்க அலுவலர்களுக்கு உத்திரவிட்டுள்ளதால், தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் கண்காணிப்புப் பணிகளை தீவிரமாக செய்து வருகிறார்கள். வாகனங்கள் மற்றும் அரசியல் கட்சியினரின் செயல்பாடுகள் கூர்ந்து கவனிக்கப்பட்டு வருகிறது.

09.03.2016 அன்று சேலம், தாரமங்கலம் பகுதியில் போதிய ஆதாரங்கள் இல்லாமல் எடுத்துச் செல்லப்பட்ட ரூ.1,60,000/– கிருஷ்ணகிரியில் பெங்களூரைச் சேர்ந்தவரால் எடுத்துச் செல்லப்பட்ட ரூ.7,50,000/– கோலார் மாவட்டத்தைச் சேர்ந்தவரால் கொண்டு செல்லப்பட்ட ரூ.1,41,550/– மற்றும் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவரால் நாமக்கல் மாவட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட ரூ.1 லட்சம், திருப்பூரில் பிடிபட்ட தேனி மாவட்டத்தைச் சேர்ந்தவரால் கொண்டு செல்லப்பட்ட ரூ.5,67,580/– வடபழனியிலிருந்து கட்டிட ஒப்பந்தரால் ஈரோடுக்கு கொண்டு செல்லப்பட்ட ரூ.7,00,000/– கேரளாவிலிருந்து திருப்பூருக்கு கொண்டு செல்லப்பட்ட ரூ.22 லட்சம் கேரளா, குருவாயூரிலிருந்து நீலகிரி மாவட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட ரூ.2 லட்சம், எர்ணகுளத்திலிருந்து நீலகிரி மாவட்டத்திற்கு கொண்டு செல்லப்பட்ட ரூ.79,000/– உட்பட மொத்தம் ரூ.48,98,130/– ரொக்கம் 09.03.2016 அன்று பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து தேர்தல் அலுவலர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், அனுமதி இல்லாமல் விதிமீறி எடுத்துச் செல்லப்பட்ட பீர், பிராந்தி, ஒயின் போன்ற மதுவகைகள் கைப்பற்றப்பட்டதோடு, வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாவட்டத்தில் உரிய அனுமதியின்றி எடுத்துச் செல்லப்பட்ட 45 ரேஷன் அரிசி மூடைகள் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் தேதி அறிவித்தபின் இதுவரை ரூ.86,96,660/– ரொக்கப்பணமும் ரூ.1,88,830– மதிப்புள்ள 115 கேஸ் அடுப்புகளும் இதுவரை பிடிபட்டுள்ளன. இதுவரை 48 வழக்குகளின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ப்பட்டுள்ளன. மதுரை மொட்டமலைப்பகுதியில் அனுமதியில்லாமல் பொதுச் சுவரில் விளம்பரம் எழுதியது, கடலூர் மாவட்டம் விருத்தாசலம் பகுதியிலுள்ள பாலக்கரையில் தேர்தல் விதிகளை மீறி டிஜிட்டல் பேனர் வைத்தவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**